(செய்தித்தாளாகப்பதிவுசெய்யப்பட்டது)

விலை அணா 2

கண்ணகி
சந்தா விபரம்
ஒரு வருடம் 4—0—0
6 மாதம் 2—2—0
தனிப் பிரதி 0—2—0
கண்ணகி—மதுரை

கண்ணகி

தேசிய தீவிர மாதமிருமுறை.

எல்லா அதிகாரமும் மக்களுக்கே - நேதாஜி

ஒலி 4 | மதுரை, மன்மத—ஆவணி 21 (5—9—55) | அலை 7

போர்ச்சுகலின் ஆலோலமும்

மக்கள்—ஆவேச வெறியேறி மார் தட்டுகிறார்கள்—

விடுதலை வேட்கை மேவிய தொண்டர்களின் உயிர்கள் போர்ச்சுக்கீசிய கசாய்கடையில் உறைகின்றன—

தலைவர்களின் தலைகளை வெறியர்களின் துப்பாக்கிகள் துளைக்கின்றன—

பெண்களின் கற்பு பட்டப் பகலில் பகிரங்கமாய் பறிபடுகிறது—

ஜனநாயகம் சந்து சந்தாய்க் கிளர்ந்தெறியப் படுகிறது—

அஹிம்சாதத்வமும் கொடியரின் காலடியில் மிதிபடுகிறது—

இத்தனைக்குப்பிறகும் அன்னிய முரடரின் மண்ணாசை நிறைவு பெறவில்லை—இவ்வளவு படு பாதகங்கள் சேர்ந்தும், வெறியரின் ஆசையை அசைக்கக்கூட முடியவில்லை.

வரட்டும்—எவர் வந்தாலும் வேட்டையாடுவோம்—என மிருக கர்ஜனை புரிகிறது போர்ச்சுகல் ஆட்சி—இந்தியாவின் கோவாவில்

இந்தியாவின் அஹிம்சைக் கொள்கையைச் சோதிக்க—அன்னிய ஆதிபத்திய போதையின் அட்டகாசத்தை எடுத்துக் காட்ட—இதுவரை நடந்த நடப்புகளே அதிகம்.

சக்திமோஹன்.

இதற்குப் பிறகும் நமது நேரு சர்க்கார் போர்ச்சுகல் மீது ஆலோலம் பாடிக் கவண் வீசவில்லை—வெளியேற்ற! ஆனால், இந்திய மக்களுக்கு ஆராரோப் பாடுகிறது—அயர்ந்து தூங்க வைக்க!

இந்தியாவின் ஆரோராவும்

காரணம் கேட்டால், சமாதானக் கொள்கைக்கு சளிப் பிடித்து விடுமாம்!

சமதானக் கொள்கையைக் காப்பதற்காக மக்கள் மாய்வதும் மானம் போவதும் சரியா? என்றால் "சர்வதேசச்சிக்கல்" ஏற்படுமாம், நேரு கூறுகிறார்—கூசாமல்! ஆனால் நேருவின் கூற்றிலிருந்து அவருடைய சமாதானக் கொள்கை, இந்தியரின் உயிரைக் குடிக்கவும்—இந்தியாவின் மரியாதையைக் காலி செய்யவும்தான் உதயமாகி இருக்கிறதா? என்ற கேள்வி கிளைவிடுகிறது.

அது, நாசமாய்ப் போன சமாதானமே, நீ சாகாயா? என்ற ஆத்திரக் குரலை உண்டாக்குகிறது—மக்களிடம்!

ஆம்! உயிர்ப்பலி கேட்கிற சமாதானமும், மானத்தை ஏலம் போடுகிற சமாதானமும் யாருக்குத் தேவை?

பிறந்து பத்து வருடங்களாகியும், எடுத்தடி வைத்து எதையுமே சாதிக்க மாட்டாத இந்த

[7-ம் பக்கம் பார்க்க]

இந்தக்கட்டத்தில், நேருவுக்கு, நேர்மை, நெறி, நியாத்தின் பிரதி நிதித்வ அந்தஸ்தைக் கொடுத் துள்ள மேற்கத்திய வல்லரசுகள் என்ன செய்கின்றன? என்ன செய்தன? என்ன செய்திருக்க வேண்டும்?

ஒன்றுமே செய்யவில்லை-நேரு வுக்குக் குளிப்பாட்டுவதைத் தவிர! நேரு மீது— அவரின் நியா யத்தின் மீது- சமாதானக் கொள்கை மீது- மேற்குவல்லரசு கள் காட்டுகிற அபிமானம், ஆதரவு வகைகளுக்கு உண்மை யின் அழுத்தம் இருக்குமானால், கோவா விவகாரத்தில் போர்ச்சுகல் புரியும் இரட்டைமிருகக் கொடு மையை அந்த மேற்கு வல்லரசு கள் அநுமதிக்குமா?

உண்மையில் கோவா விவகா ரத்தில் நேருவின் தரப்பில் உள்ள நியாயத்தை மேற்கு வல்லரசுகள், அங்கீகரிக்குமானால், ஒரேயொரு அறிக்கையே போதும் போர்ச்சு கலை வெளியேற்ற!

நேருவுக்கு மேற்கு வல்லரசு கள் கொடுத்துள்ள மரியதைை யில் விளம்பரத்தரந்தான் அதிகம் என்பதை போர்ச்சுகலின் முரட் டுத்தனம் நன்கு விளக்குகிறது.

இதிலிருந்து மேற்கு வல்லரசு கள் தமது எதிர்கால சாதனைக்கு ஒரு முன்னேற்பாடாகநேருவை புகழ்ந்துவிட்டு, அவரது செல் வாக்கைப் பயன் படுத்திக்கொள் கின்றனவேயன்றி நேருவின் இந் தியாவிற்கு எதையும் செய்வதற் கல்ல என்பது தெளிவாகிறது. மேலும் பிரிட்டன் ஏகாதிபத் யம் போர்ச்சுகலுக்குப்பின்னணி யில் இந்தியாவுக்குஎதிராக வேலை செய்கிறது என்பது நிதர்சன மாகி விட்டது.

இந்தியாவைக் காமன்வெல்த் கட்டுத்தறியில் இணைத்துக் கொண்டிருக்கிற பிரிட்டன் இந் தியாவின் ஒருபகுதியில்தொடர்ந்து ஆதிக்கம் செலுத்த முனையும் போர்ச்சுகலைக் கண்டித்து இன்னும் அதிகாரபூர்வமான அறிக்கை எதுவும் விடுக்கவில்லை. அதற்குப்பதிலாக பிரிட்டன் பத் திரிகைகள் நேருவைத் தாறு மாறுகத் தாக்கி எழுதியுள்ளன.

கொரியா, இந்தோ—சீனு, தாய் லாந்து.போன்ற விவகாரங்களில் அழைப்பும், சம்பந்தமும் இன்றி யே தலையிட்ட அமெரிக்கா, இந்தக் கோவா விவகாரத்தில், போர்சுகல் முரடர்கள், சர்வதேச நெறிமுறைகளையே மீறி நடந்து கொள்வதைப் பார்த்துக் கொண்டு, பெயரளவுக்குக்கூட ஒரு அறிக்கைவிடுக்கவில்லை.

ரஷ்யாவும் மக்கள் சீனுவும், இதர ஆசிய நாடுகளும் கண் டித்து அறிக்கையிட்டிருக்கின் றன.

ஆனுல் இந்த நாடுகள் போர்ச் சுகலைக் கண்டித்து அறிக்கையி டத்தான் முடியுமே தவிர இந்தி யாவுக்கு உதவியாகச் சண்டை யிடவரா—வர முடியாது! ஆனுல் போர்ச்சுகலுக்கு ஆதரவாக மேற்குவல்லரசுகள் இந்தியாவை எதிர்த்து களத்திலேகூட இறங்க லாம்.

ஏனெனில், இந்தியா உறவு கொண்டாடுகிற நாடுகளோடு செய்து கொண்டுள்ள ஒப்பந்த ஷரத்து அப்படி!

போர்ச்சுகல் மேற்கு வல்லரசு களோடு செய்து கொண்டுள்ள ஒப்பந்த ஷரத்து இப்படி!

எல்லாவற்றிற்கும் மேலேறி 'கோவா' போர்ச்சுகலின் ஒரு பகுதி என்பதை அடிப்படை யாகவைத்து ஏதேனும் சமாதா னம் பேசச் சம்மதிக்க முடியுமே யன்றி கோவா இந்தியாவின் ஒரு பகுதி என்ற அடிப்படையில் எந்தப் பேச்சுக்கும் உடன்பட முடியாது'என்று லிஸ்பன் சர்க் கார் வெள்ளையாகப் பிரகட னித்து விட்டது.

அந்தப் பிரகடனத்தை ஊர்ஜி தம் செய்யும் வகையில் நிராயுத பாணிகளாய் வெறும் கொடி யோடு எல்லைப் பிரவேசம் செய யும் தொண்டர்களைத் துப்பாக்கி களால் சுட்டும் டம்டம் குண்டு களைப் பொழிந்தும், கொன்று குவிக்கிறது போர்ச்சுகல் ஆட்சி!

இந்தியாவின் ஒரு பகுதியான கோவாவின் உரிமைப் பிரச்னை சம்பந்தமாய் மேற்குவல்லரசுகள் அனுசரிக்கும் கொள்கை திட்ட வட்டமாகத் தெரிந்துவிட்டது.

இனி இந்திய அரசாங்கம் ராணுவ முறையில் நடவடிக்கை எடுக்காத வரை கோவாவை அடையமுடியாது என்பதற்கும் இதைவிட வேறெதுவும் தேவை இல்லை.

இந்த நிலையிலும் இந்திய சர்க் கார் **சமாதானம்** என்றும், **சர்வ தேசச் சிக்கல்** என்றும் கூறிக் கொண்டிருப்பது அதன் மரியா தையில் விழுந்துகிடக்கிற அவ லட்சணத்தைதான் காட்டுகி றது.

வல்லரசு நாடுகள் சமாதானம் பேசினுல் அர்த்தமிருக்கிறது- மதிப்புமிருக்கிறது. ஆனுல் இந் தியாவின் சமாதான முயற்சியில் மதிப்பீனம்தான் அதிகப்பட்டு நிற்கிறது.

சமாதானத்திற்காக முயலும் நாடு ஏனைய நாடுகளோடு சமம் பெற்று லட்சியசாத்தியத்திற்கா கப்போரில் இறங்கவும் முடிந்த அளவுக்கு ஆண்மை பெற்றி ருக்க வேண்டும். அப்பொழுது தான் அந்த நாட்டின் முயற்சி க்கு மரியாதை கூடும்.

தன்னுட்டைப் பாது காத்துக் கொள்ளவே போதிய வலிமை யின்றி சமாதான ஏற்பாட்டில் இறங்கும் எந்தநாடும்தன துமுடி யாத்தனத்தை விளம்பரப்படுத் திக் கொள்ள முடியுமே தவிர எடுத்த வேலையைச்செய்து முடி க்கமுடியாது அத்தகைய நாடு கள் மேற்கொள்கிற சமாதான ஏற்பாடுகள் உலகிற்கு நல்லது செய்வதைவிடக் கெடுதலைத் தான் அதிகம் செய்யும்.

இந்தியா எந்த நாட்டிற்கும் எதிரியல்ல. ஆகவே இந்தியாவை பொறுத்தவரை எதிரியே இல்லா ததால் சமாதானமும் தேவை யில்லை. ஆயினும் உலகநலனுக் காக அதுசமாதான ஏற்பாட்டில்

[8-ம் பக்கம் பார்க்க]

ஆப்ரிக்காவும் ஆங்கிலோ–ஐரோப்பியரும்

2-வது மகாயுத்தம், ஜப்பானியரின் தீரச்செயலாலும், நேதாஜியின் மதியூகத்தாலும், ஆசியாவை முழுதும் விடுவிக்காத போனாலும், முன்னணியில் கொண்டுவந்து நிறுத்திவிட்டது!

ஆனால் ஆபிரிக்காக்கண்டம் மிகப் பிற்போக்கான நிலையில் அமெரிக்க—பிரிட்டன் அக்ரமங்கள் அத்தனைக்கும் கச்சாப் பொருள்களைத் தந்து உதவி, வெள்ளையரல்லாதோர் அத்தனை பேர்களுக்கும் ஒரு வெடிச் சுரங்கமாக இருந்தது.

அதுவும் தெய்வாதீனமாக பழைய கலாச்சாரத்தின் பண்பைக்கொண்ட எகிப்திய மக்களாலும், கிராண்ட்மப்டியின் (ஜெருசலேம்) அரசியல் நிபுணத்வத்தாலும் முன்னணிக்கு வந்துகொண்டிருக்கிறது.

அதன் அடையாளம்தான் வட ஆபிரிக்காவிலுள்ள அல்ஜீரியா, மொரோக்கோ கிளர்ச்சிகள்!

உலக வல்லரசுகளில் ஒன்ருக இயங்க எத்தனிக்கிற — சுற்றுப் பிரயானத்தின் பெயரால் உலகத்திற்கே சமாதானத் தூதுவராகப் பிரியப்படுகிற இந்தியா, ஒன்றுக்குமுதவாத கோவாவினிடத்தில் அவமானகரமாக அடிவாங்குகிற பொழுது — நாய்போல் இந்திய மக்கள் சுட்டுத் தள்ளப்படுகிற பொழுது—அதைக்கண்டு கலவரமடைந்த இந்தியப்பிரதமர் பார்லிமெண்டில் ,விவரமல்லாத-சட்ட நிர்ணயத்திற்குப் புறம்பான—அதிசயமான அஹிம்சையைப்பற்றி பிரமாதமாகப் பேசி தன் தோல்வியை — அவமரியாதையை மறைத்து அழகுபடுத்தப் பார்க்கிருர்.

நாம் அன்னியனுக்கு அடிமையாய் இருந்தபொழுது அஹிம்

உ. முத்துராமலிங்கத் தேவர்,
எம். எல். ஏ.

சையை ஒரு சாதனமாகக் காட்டிப் போராடியது உண்மை.

ஆனால், இப்பொழுது நாம் ஒரு சர்க்கார்.

இப்பொழுதும் அதே அஹிம்சையை நாம் பேசுவதானால், நமக்கு ஒரு ராணுவம் தேவையில்லை; அதற்கென மக்களின் வரிப்பணம் 60 சத விகிதத்துக்கு மேல் செலவழிக்கப்பட வேண்டுவது அனாவசியமும் அறிவீனமுமாகும்.

மேலும், சந்தர்ப்பம் நேருகிறபொழுது, காஷ்மீர், ஐதரபாத், அசாம், பம்பாய், சென்னை (ஆந்திரா) போன்ற இடங்களில் கலவரங்களை ஒடுக்குவதற்கு நாம் படைகளை ஏவாமலோ, பலாத்காரத்திலீடுபடாமலோ இருக்கவில்லை. இதைச் செய்துகொண்டே, வெள்ளை வர்க்கத்தைக் காண்கின்ற பொழுதெல்லாம்—அவர்களோடு மோதல் வருகிற நேரத்திலெல்லாம்-அகிம்சையைப் பிரமாதப் படுத்துவது காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு மாமூலாகவும் தொத்து நோயாகவும் ஆகிவிட்டது.

இது, தேசத்தை அவமானத்தில் மாத்திரமல்லாமல், அழிவிலும் கொண்டுபோய் விடும் என்பது நிச்சயம்!

இந்தியாவின் அவமானகரமான நிலைமை இவ்வாறிருக்க, அரேபியர்களின் தீரச் செயல், கருப்பு வர்க்கத்திற்கே ஒரு எடுத்துக் காட்டாக மாறி இருக்கிறது.

அல்ஜீரியா கலவரம் 1 லட்சம் படைகளுக்கு மேல் இறங்கி

[7-ம் பக்கம் பார்க்க]

கிடச்சுட

எல். எல்லையா. தென்னம்பட்டி

கே:- ஹிட்லரின் கட்சிக்குப் பெயரென்ன? அவர் எழுதிய புஸ்தகம் எது?

ப:— நாஜிக் கட்சி. அவர் எழுதிய புத்தகத்தின் பெயர் எனது போராட்டம் என்ற மெயின் கேம்ப்.

கே:— உலகப்படம் யாரால் வரையப்பட்டது? அதுதான் உண்மையான உலகத் தோற்றம் என்று எப்படி நம்புவது?

ப:— உலகப்படம் முதன்முதலில் சீனர்களால்தான் வரையப்பட்டது என்று பிரிட்டன் அறிஞர் எச். ஜி. வெல்ஸ் எழுதியிருக்கிறார். ஆனால் அதற்கு முன்பே மகஞ்சதரோ என்ற நமது புராதன நகரின் ஒரு கல்வெட்டில் உலகப்படம் பொறிக்கப்பட்டிருப்பதாக சமீபத்தில் வெளியான இந்தியப் புதைபொருள் ஆராய்ச்சி நிலைய அறிக்கையொன்று கூறுகிறது. இதிலிருந்து முதன்முதலில் உலகப் படத்தைப் பொறித்தது இந்தியர்தான் என்றாகிறது, ஆயினும் முதன்முதலில் அச்சுத் தொழிலை ஆரம்பித்தது சீனர்கள்தான். எது எப்படியாயினும் உலகப்படம் முதன்முதலில் வரையப்பட்டது ஆசியர்களால் என்பது உறுதி. இன்று அது விரிவும் விளக்கமும் கொண்டுவிட்டது. இன்றுள்ள உலகப்படம் உண்மையான உலகத் தோற்றத்தின் அமைப்புதான் என்பதில் ஐயங்கொள்ள ஒன்றுமில்லை,

வே. நாராயணி — உத்தரகோசமங்கை.

கே. ஐயா, நான் நன்கு படித்தவள். எனது கணவரும் ஒரு பட்டதாரி. நான் நன்றாகவே தான் சமையல் செய்கிறேன். ஆனால் அது என் கணவருக்குப் பிடிப்பதே இல்லை. சமையல் மட்டம் என்று சொல்லிவிட்டு தான் ஒரு தியாகி என்றும் எனது கணவர் அடிக்கடி கூறிக்கொள்கிறார். நீங்கள் எந்த வகையில் தியாகி என்று கேட்டால் சொல்ல மறுக்கிறார். அவர் தம்மைத் தியாகி என்று சொல்லிக்கொள்வதன் உட் பொருள் எதுவாக இருக்கும்?

ப:— உமது சமையலை சாப்பிடுவதே ஒரு பெரிய தியாகம் என்பதை அவ்வாறு குறிப்பிடுகிறாரோ என்னவோ.

வை. தியாகேசன் – கொடைரோடு.

கே:— பேரிக்காய்க்கு ஒரு நல்ல மாற்றுப் பெயர் கொடுங்கள்.

ப:—ஏழைகளின் ஆப்பிள்.

பா. கணேசன்-வையாபுரி.

கே;— இன்றைய சென்னை சட்டசபையை எதற்கு ஒப்பிடலாம்?

ப:—பத்தியச் சாப்பாட்டிற்கு.

மா. சீனிவாசன், திருத்தணி.

கே:— அதிக நிலப்பரப்பையும், அதற்குத் தகுந்த ஜனத்தொகையைக் கொண்டிராததுமான நாடு இன்றைய உலகில் எது?

ப:—ரஷ்யா,

ஏ. கைலாசம்-மயிலை.

கே:— சீன மக்களுக்கும், இந்திய மக்களுக்கும் என்ன வித்தியாசம்?

ப:— சீன மக்கள் வாழ்கிறார்கள். இந்திய மக்கள் வாழ்க்கைக்கு ஏங்குகிறார்கள்.

சி. கோவிந்தராஜ், மதிச்சியம்.

கே:— விஞ்ஞானம் முன்னேறியுள்ள பாட்டாளி நாடான ரஷ்யாவில் உள்ள தொழிலாளியின் வாழ்க்கைத் தரத்தைவிட, முதலாளித்வ அமெரிக்காவில் உள்ள தொழிலாளியின் வாழ்க்கைத் தரம் உயர்வாகவும், ஆனந்தமாகவும் இருக்கிறது. எது உண்மையான பாட்டாளி நாடு?

ப:— அமெரிக்க—ரஷ்யத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தில் வித்தியாசம் இருப்பது உண்மைதான் ஆனால் இது இன்றைய ரஷ்யாவில்தான். நாளைய ரஷ்யாவில் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் அமெரிக்கத் தொழிலாளரையும் மிஞ்சிவிடும். ரஷ்யா ஒரு சிறந்த நாடு என்ற அந்தஸ்துக்கு வந்ததே சமீபத்தில்தான். இதற்கிடையில் அங்கு தொழிலாளர்களுக்கு இவ்வளவு வரை வாழ்க்கை வசதி தரப்பட்டிருப்பதை அமெரிக்காவின் ஆரம்ப நிலையோடு ஒப்பிட்டால் எவ்வளவோ மேலானதாகத் தெரியும். இன்று ரஷ்யத் தொழிலாளியைவிட அமெரிக்கத் தொழிலாளி அதிக வசதியை அநுபவிக்கிறான். ஆனால் அங்கு வேலையில்லாத் திண்டாட்டம் உண்டு—ரஷ்யாவில் அது இல்லை. வசதி குறைவாக இருந்தாலும் ரஷ்யாவில் எல்லாத் தொழிலாளர்களுக்கும் அந்த வசதி நிரவலாகக் கிடைக்கிறது. ரஷ்ய சுதந்திரம், அமெரிக்க சுதந்திரத்தின் வயதுக்கு வருகிறபோது ரஷ்யத்தொழிலாளியின் வாழ்க்கைத் தரம் ஓங்கியே தீரும். உழைத்து உருத்தேறியநாடு ரஷ்யாவாக இருப்பதால் அசல் பாட்டாளிநாடு என்ற பெயர் ரஷ்யாவுக்குத் தான்!

சி. கே. கிருஷ்ணமூர்த்தி, கான் பாளையம்— மதுரை.

கே:— இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் கிடைக்காதபடியால்த் தான் இந்தியாவில் உள்ள காலனி ஆட்சிமுறையை ஒழிக்கமுடியவில்லை என்று பார்வார்டுபிளாக் தலைவர் முத்துராமலிங்கத் தேவர் அடிக்கடி சொல்லுகிறார். மக்கள் சீன அரசாங்கம் என்ன சுதந்திரத்துடன் வாழுகிறது? அதற்கு உண்மையான சுதந்திரம் கிடைக்காததால்த்தானே ஹாங்காங்காலனியையும், பார்மோசா தீவையும் காலனி ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க முடியவில்லை?

[12.ம் பக்கம் பாக்க]

அமெரிக்க செல்வர்களே!

தேவைக்குமேல் திரட்டிக்குவிக்கிற நீங்கள் மனிதர்கள்தானா?

ஐக்கிய அமெரிக்காவிலிருக்கிற கோடீஸ்வரர்களைப்பற்றிய ஒரு தீராக் குழப்பம், என் மனதை நீண்டகாலமாக அரித்துக்கொண்டே இருந்தது!

என்?

அவர்களோ அன்றி அவர்களின் பணமோ, படையெடுத்துவந்து என்னைப் பாய்ந்தது அல்லது பாயும்என்று அல்ல—அவர்கள் எல்லோரையும் போல, மனிதவர்க்கத்தோடு சம்பந்தப் பட்டவர்கள்தானா? அல்லதுமாறுபட் வேறுவகையினரா? என்பதைத் திலகயமுடியாமல்!

எனெனில் அவர்களுடைய பண ஆசையும், அதை நிறைவேற்றிக் கொள்வதில் அவர்களுக்குள்ள அக்கறையும் தனி! அ மனித மனதிற்கு மடங்காத ஒருகோரமான அம்ஸமாக இருக்கிறது!

மனித இனம் வகையோடு வாழ வேண்டும்; அதற்கான தேவைகள் பலஇருக்கின்றன; அவைகளை அடைகிற விஷயத்தில் அவரவருக்கும், ஆசை—அக்கரை இரண்டும் அவசியம்—தட்டியில்லை! இந்த வகையில் அமெரிக்க கோடீஸ்வரர்கள், ஏனையோரை விட சற்று அதிகமாகப் போகலாம்—குற்றமில்லை; எனக்கும் அதைப் பற்றிய மன அரிப்பு ஏற்பட்டது! ஆனால் அவர்களின் குறி, மனித வாழ்வின் தேவையோடு தீர்ந்துவிடுவதாயில்லை; தேவைக்குமேல் பலபடிகள் ஏறி, கோடி கோடியாய்ப் பணங்களைக் குவித்து வைப்பதிலேயேஅவர்களின் திறமையும் திராணியும் செலவாகின்றன!

இவ்வளவு பணம் திரட்டுகிறார்களே, இது என்? திரட்டுகிற அவ்வளவு பணமும்அவர்களுக்குத்தேவைதானா? அப்படி அவ்வளவு பணமும் தேவைதான் என்றால். அவர்கள் மனிதக்குலத்தோடு சம்பந்தப் பட்டவர்களாக எப்படி இருக்கமுடியும்? அவர்களின் அங்கங்களும் அவயவங்களும் மனித இயல்புகக்கு மாறுபட்டதாகத் தானே இருக்கவேண்டும்? அதாவது அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏறக்குறைய மூன்று வயிறுகளும், நூற்றைம்பது பற்களுமாவது இருக்க வேண்டும்—அதோடு அவர்கள் எந்நேரமும் இடைவிடாமல் பலவகைப் பதார்த்தங்களைத் தின்றுகொண்டே இருக்கவேண்டும்—வினாடி விடாமல்

> எண்ண அலைகளை எழுத்தால் வடிப்பதில் அதிமேதை மார்க்சிம் கார்க்கி. அவர் எழுத்தில் உண்மை பீறிட்டெழுவதையும், கற்பனையின் சுவை சொட்டுவதையும் வேண்டிய மட்டும் எடுத்து அநுபவிக்கலாம். கார்க்கியின் பேனாவிலிருந்து எத்தனையோ மகத்தான தத்துவங்கள்—மனிதச் சபலத்தைக் கலைக்கும் போதனைகள்— வெளியேறி இருக்கின்றன. அதில் ஒன்றுதான் இது. "ஒரு கோடீஸ்வரன்" என்ற தலைப்பில் கார்க்கி எழுதிய கதாம்சம் கலந்த கட்டுரையை சக்தி மோகன் தமிழாக்கி இருக்கிறார்.

ஏதேனும் பதார்த்தவகைகளைத்தின்றுகொண்டேஇருந்ததில் அவர்களின் தாடை எதையுமே மெல்ல முடியாதபடி வீங்கி அலுத்துப்போகும்—பிறகு அவர்களின் நீக்ரோ வேலைக்காரர்களை அழைப்பார்கள்— அழைத்து, பாக்கி பதார்த்தங்களை அவர்கள் பற்களாலேயே அறைத்துத் தரச் சொல்லுவார்கள்—அதை அப்படியே வாயைத்திறந்து விழுங்குவார்கள்.

இதற்குள் அவர்களின் வயிறு மேற்கொண்டு எதையுமே திணிக்க முடியாத அளவுக்கு விம்மிப்போகும்—உடல் ஒரேபாரமாகி அசையக்கூட முடியாமல் நிலைத்துவிடும்— விடிந்ததிலிருந்து நடுஇரவுவரை உண்கிற வேலையை ஓயாமல் செய்ததால் அவர்கள் உடலிலிருந்து வியர்வை பிரளயம்போல் பெருகிவிடும்!— அப்புறம் அவர்களை, அந்த வேலைக்காரர்கள் தூக்கிப்போய் படுக்கையில் போடுவார்கள்—உறங்குவார்களோ, மாட்டார்களோ— பொழுது விடியும்— திரும்பவும் அதே சாப்பிடுகிற வேலையைத் தொடருவார்கள்! இவ்வளவு தேவை இருப்பதால்த்தான் அவர்களின் செயல் முழுதும் பணம் திரட்டுவதிலேயே செலவாகிறது என்று தான் எண்ணிக் கொண்டிருக்தேன்!

அமெரிக்கக்கோடீஸ்வரர்கள்செல்வத்தைச் சேமிக்கிற விஷயத்தில் மனிதானுச்சாரத்தை விட்டு வெகுவாக வித்தியாசப் படுவதால், நான் அவ்வாறு எண்ணுவதற்கு அர்த்தமிருந்தது. ஆனால் பிறகு எனக்கு வாய்த்த ஒருஅநுபவத்தால் அந்தஎன் எண்ணம் பிசகிவிட்டது. அதாவது அமெரிக்கக் கோடீஸ்வரர் ஒருவரை நேரில் சந்தித்து உறையாடும் சந்தர்ப்பம் ஒரு சமயம் வாய்த்தது- அந்தக் கோடிஸ்வரர், நான் முன்பு நினைத்த மாதிரி உருவத்தைப் பொறுத்தமட்டில், மனிதர்களைவிட்டு வேறுபட்ட தோற்றத்தில் இல்லை. எல்லோரையும் போலவேதான் இருந்தார். பிறகு தான், என் எண்ணப் பிசகை உணர்ந்தேன், ஆனால் மற்றொரு சந்தேகம் எழுந்து உறுத்த ஆரம்பித்துவிட்டது. அதாவது, எல்லா மனிதர்களையும் போலவே மாறுபடாமல் தோற்றமளிக்கிற அமெரிக்கச் செல்வர்கள் எதற்காக தேவைக்குமேல் பணங் குவிப்பதிலேயே விவேகத்தையும்

விரயமாக்குகிறீர்கள்? என்ற கேள்வி தான் அது!

நான் சந்தித்த அந்த மனிதர் மிகப்பெரிய கோடீஸ்வரர். ஆனால் கோடீஸ்வரர் என்பதற்கான தனிக் குறிகளோ, தேஜசோ, ஆடை ஆபரணங்களோ அவரிடம் இல்லை. நல்ல முதிர்ந்த வயது. முதுமையைக் காட்டும் சுருக்கங்கள். புகை சூழ்ந்த கண்கள். சுரப்பு வற்றிய அங்கங்கள். புதிதாகப் பிறந்த சிசு மாதிரியான முகம், குறிப்பாக, அந்த மனிதரைப் பார்த்த போது இந்த உலகிற்கு நேற்றுத் தான் வந்த மாதிரியோ அல்லது நாளையே உலகைவிட்டுப் பிரியப்போவது மாதிரியோ தான்பட்டது! அவர் தரித்திருந்த உடையும் அப்படிப் பிரமாதமானதாயில்லை—சாதாரணம் தான். அவர் அணிந்திருந்த நகைகளும் பெருந் தொகை கொண்டதாயில்லை. ஒருமோதிரம்—கெடியாரம் பற்கள் இவைகள்தான் தங்கத்தாலானவை. அவருடைய ஆடை ஆபரணத் தோற்றத்திலிருந்து அவரை, பிரிட்டனின் பெரிய பிரபுக்களுடைய வேலைக்காரர்களில் ஒருவனாக மதிப்பிடலாமே தவிர, ஒரு பெரிய செல்வந்தர் என்று எவரும் கருதமுடியாது.

அவருடைய அறைக்குள் நான் அவரால் வரவேற்கப்பட்டேன். அவர் என்னை வரவேற்ற விதத்தில் விசேஷம் எதுவும் இல்லை. அங்கிருந்த நாற்காலிகள் மிகப்பெரியவைகளாய்—மனித அளவுக்கு மேம்பட்டதாய்—யானைகள்கூட தாராளமாய் உட்காரக்கூடிய அளவுக்கு பெரிதாய் இருந்தன! மனிதன் உட்காருவதற்கு இவ்வளவு பெரிய நாற்காலிகள் ஏன்? என்ற சந்தேகத்தோடு அவரருகில் சென்று அமர்ந்தேன். அவரைப் பார்த்ததும், நான் குறித்துவந்த அந்தப் பெரிய செல்வர் அவர்தானா என்பதை, நான் பார்த்த அளவில் நிச்சயிக்க முடியவில்லை. ஏனெனில் பெரிய கோடீஸ்வரர் என்றால் ஏதோ என் அநுமானத்திற்கு அப்பாற்பட்ட ஒரு விசேடத் தோற்றமுடையவராகத் தான் இருக்கவேண்டும் என்பது எனது முடிவு. ஆகவே புறத்தோற்றத்தில் சாதாரண தொழிலாளி மாதிரி காட்சியளித்த அந்தக் கோடீஸ்வரரைக் கண்டதும் நான் நம்பவில்லை. வேறுபுறம் கண்களை ஓட்டினேன்; ஒருவரும் தட்டுப்படவில்லை; அவர் மட்டும்தான் இருந்தார்; கேட்டு வைப்போமே என்றெண்ணி தாங்கள் தானா கோடீஸ்வரர்? என்ற இரு வார்த்தையை அரைவிநாடியில் முடிப்பதற்குப் பதிலாக இரண்டு விநாடிகள் இழுத்தேன். ஆம்! நானேதான் என்று தமது தலையசைப்பின் மூலம் என் கேள்விக்கு விளக்கம் தந்தார் அந்தக் கோடீஸ்வரர்.

நான்: தாங்கள் காலையில் எவ்வளவு ஆகாரம் புசிப்பீர்கள்?

அவர்: சில ஆரஞ்சுச் சுளைகள்; ஒரு முட்டை; ஒருகப் தேநீர். அவ்வளவுதான். வேறு ஆகாரம் காலையில் உண்பதில்லை.

நான்: சரி. ஒரு நாளைக்கு எத்தனை தடவை உண்கிறீர்கள்?

அவர்: இரண்டே தடவை! காலை—மாலை இருவேளைதான். அதுவே எனக்குப் போதியது. ஒரு பிளேட் சூப், ஏதேனும் கொஞ்சம் உணவு, ஒரு இனிப்பான பழம், ஒருகப் காபி, ஒரேயொரு சுருட்டு. இதுதான் என் மாலை ஆகாரம்.

எனது சந்தேகமும், பிரமிப்பும் விசாலமாகி என்நெஞ்சை அடைத்துக்கொண்டுவிட்டது! ஒரு பெரிய கோடீஸ்வரர் எப்படியெல்லாமோ இருப்பார்—அவர் புசிக்கும் ஆகாரம் அளவுகடந்ததாயிருக்கும்—என்றெல்லாம் நான் நினைத்ததற்கு மாறாக ஒரு சந்நியாசி மாதிரி தோற்றமளித்த அவரையும் அவர், அவரைப்பற்றிச் சொல்லிய பதிலையும் கேட்ட பிறகு பிரமிப்பு பெரிதாகி, சற்றுநேரம் வரை என்நெஞ்சில் எந்த நினைவையும் திணிக்கமுடியாமல் திணறிப் போனேன். விஷயம் குஷியாக இருந்ததால் சற்று மூச்சு வாங்கிக் கொண்டு "நீங்கள் சொல்வதெல்

[14-ம் பக்கம் பார்க்க]

ஆசியாவின் பெரும் பகுதி
மக்களின் அறிமுகத்தைப்பெற்ற
நவீன இயந்திரத் தயாரிப்புகள்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ஒடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறது, பிரெஞ்சு சர்க்கார்.

அத்தோடு மட்டுமல்லாமல் எகிப்திய சர்க்கார் ஆங்கிலோ—அமெரிக்கர் உள்பட அட்லாண்டிக் கூட்டு சாசனத்தைச் சேர்ந்த "நாடுகளுக்கும் எச்சரிக்கை விடுத்திருக்கிறது,

பிராஞ்சுக்காரர்கள் நிராயுத பாணிகளாக பொதுமக்களை ஒடுக்குவதற்கு நவீன ஆயுதங்களை உபயோகிப்பது அரேபிய வர்க்கம் அத்தனைக்கும் எதிர்ப்பாக எடுக்கப்படுகிற சட்ட விரோதமான நடவடிக்கை- இதை அட்லாண்டிக் கூட்டு சாசனத்தைச் சேர்ந்த அத்தனை தேசங்களும் செய்வதாகத்தான் நாங்கள் கருதுகிறோம் என்று அரேபியர் அனைவரையும் ஒன்று திரட்டி, வெள்ளை வர்க்கத்திற்குச் சவால் விடுத்து, வட-ஆபிரிக்காவை பூரணமாக மீட்டுகிற பாதையில் இறங்கியிருப்பதோடு மட்டுமல்லாமல், அல்ஜீரியக் கலவரங்கள் நடந்து நான்கு நாட்களுக்குள்ளாக இஸ்ரேலுடன் நடத்திவந்த பேச்சையும் முறித்துக் கொண்டு இஸ்ரேலோடு விமான மோதல்களிலும் இறங்கி விட்டது எகிப்து!

அந்தச் செய்தியை இந்தியப் பத்திரிகைகள் மறைக்கின்றன.

இந்த நிலை, ஆங்கிலோ-அமெரிக்கருக்கு மிகப் பாதகமானதும், ஆசிய-ஆபிரிக்கர்களுக்கு அரிய சந்தர்ப்பமுமாகும்!

அல்ஜீரியாவிலும் மொரொக்கோவிலும் அமெரிக்கர்கள் அதிகப் பணச் செலவில், கோடானு கோடி டாலர்களைக் குவித்து முதல்தரமான விமான தளங்களை அமைத்து, பிரெஞ்சு உதவியின் மேல் அணு ஆயுதங்களைக்கொண்டு ஐரோப்பாவைத் தாக்குவதற்குத் திட்டமிட்டிருந்தார்கள்.

கிழக்கே இந்தோ-சீனு எப்படி பிரெஞ்சுக்காரருக்கு விரோதமாக மாறி அமெரிக்கருக்கு அபாயமாகக் காட்சி யளிக்கிறதோ, அந்த நிலையை அடைந்து விட்டது - வட ஆபிரிக்கா - ஆங்கிலோ - அமெரிக்கருக்கு!

இதன் காரணமாக அல்ஜீரியா, மொரோக்கோ பூராவிலும் போராடுவதற்காக, ஐரோப்பாவில் வைக்கப்பட்டிருந்த 6 டிவிஷன் படைகள் பிராஞ்சுக்காரரால் வரவழைக்கப்பட்டிருக்கின்றன ஆப்பிரிக்காவுக்கு!

இப்பொழுது அது அமெரிக்கர் உதவி செய்ய விரும்பினுல் ஒடுக்கப்பட்ட மக்களின் சுதந்திரத்திற்காக மேற்கத்திய நாடுகள் இருக்கின்றன் என்று விடுத்திருக்கிற அரசியல் பிரகடனம் வெளிச்சமாகி விடும்.

அதற்காக தனியாகப் பிரான்சு மாத்திரம் போராட விரும்பினுல் தாக்குப்பிடிக்க முடியாமல் தோல்வியுறும். தோல்வியை மறைக்க அரேபியர்களோடு அரசியல் தன்னக்கட்டு ஏற்படும்.

அதன் மேல் ஐரோப்பிய யுத்தம் ஆங்கிலோ - அமெரிக்கருக்காகச் சண்டையிடுகிற நிலையில் பிரெஞ்சு சர்க்காரைச் சேர்ந்தால் பிரான்சு மக்கள் அதில் ஊக்கம் காட்ட முடியாது. ஏனென்ருல்,

பிரெஞ்சு சர்க்கார் காலனிகளை எல்லாம் இழந்த பிறகு அமெரிக்க வியாபாரத்திற்காகவும், பிரிட்டன் காலனிகளுக்காகவும் சண்டையில் சேர வேண்டுவது அவசியமில்லை, இந்த நிலையை வரவிடாமற் தடுப்பதற்கு இஸ்ரேலை நம்பி நிற்கிருர்கள், ஆங்கிலோ-அமெரிக்கர்.

இரகசியமாக முதற்தர விமானங்கள், அணுஆயுதங்கள், எல்லாம் ஜெனிவா மகாநாட்டிற்குப் பிறகு இஸ்ரேலில் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இதை ஆசிய ஆபிரிக்கர்கள் அறியாமலில்லை. அதுவும் எச்சரிக்கையாக, வேண்டிய ஆயுதங்கள்பீரங்கிகளை எல்லாம் எகிப்தில் குவித்திருக்கிறது. தேவையானல் சிலநிமிஷ நேரத்தில் அரேபியர்களுக்கு உதவ ஐரோப்பாக் கண்டத்தின் தென்பாகத்தில் தேவையான ஆயுதங்கள் காத்திருக்கின்றன,

இந்த நிலைமையைப் புரிந்து கொண்ட அமெரிக்கா தன் கர்வத்தை எல்லாம் இழந்து சாட்சிக்காரன் காலில் விழுவதைக் காட்டிலும் சண்டைக்காரன் காலில்விழுவது மேல் என்ற பழமொழிககிணங்க ஜப்பானின் அன்னிய நாட்டு மந்திரியான ஷிகிமெட்சு என்பவரை அமெரிக்காவுக்கு வரவழைத்து அவருடன் சமரசம் பேசி முதற்தரமான யுத்தக் குற்றவாளிகளை எல்லாம் (உயர்ந்த ராணுவ சேனுதிபதிகளை) விடுவிப்பதற்குச் சம்மதித்து விட்டது.

ஆனல் இந்த விலைக்காக ஜப்பான் அமெரிக்காவுக்கு உதவியாகச் சண்டையில் ஈடுபடுமா என்ருல் அது பகற்கனவேயாகும்.

அமெரிக்காவுக்குத் தொந்திரவில்லாமலாவது இருக்கலாமென்று அமெரிக்கர் கருதினுல் அந்தச் சந்தர்ப்பத்தை பயன் படுத்தவேண்டுமென்று ஜப்பான் கருதும்.

சீனுவின் நிலையோ, அமெரிக்கரோடு பேசுகிற ஜெனிவா பேச்சு மிக அந்தரங்கமாகவே வைக்கப்பட்டிருக்கிற நிலையில் ஒருவரை யொருவர் ஏமாற்றும் பாதையில் இறங்கி இருக்கிறது. ஆகையால் தான் சீனர்களைக் கொண்டுவருவதற்கு இந்தியா உதவி செய்ய வேண்டுமென்றும், சீனுவில் இருககிற அமெரிககர்களைககொண்டு வருவதற்கு பிரிட்டன் உதவி செய்ய வேண்டுமென்றும் கோரப்படுகிறது.

இந்நிலையை இந்தியா பயன் படுத்துமா? அல்லது வழககம் போல் பாழ்படுத்துமா? என்பது சிந்திகக வேண்டிய விஷயம்.

[10-ம் பககம் பார்க்க]

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

இறங்கி இருக்கிறது. ஆனால் ஒரு சமாதான நாட்டிற்குத் தேவையான வலிமை இந்தியாவிடம் இல்லை. எனவேதான் அதன் சமாதான ஏற்பாடுகளுக்கு வரவேற்பிருக்கிறஅளவு வாய்மை இருக்கவில்லை. ஆம்! வலிமை இல்லாத நாட்டின் பஞ்சாயத்து எப்படி விவகாரத்தைப் பைசல் செய்ய முடியும்? சரித்திரமே கிடையாதே!

இது போக கோவாவை இந்தியாவின் உடமையாக்க அரசாங்கப்பூர்வமாய் நடவடிக்கை எடுத்தால் உடனே வெற்றிதான் என்று எட்டுப் படி மேலேறிச் சொல்லுகிற நேரு, அதே வாயால் சர்வதேசச்சிக்கல் விழும் என்று பத்துப்படி இறங்கிவந்து கம்மிய குரலில் கூறுகிறார்.

இந்தியாவுக்கும், சர்வதேச சிக்கலுக்கும் என்ன சம்பந்தம்?

இந்தியா எந்த வல்லரசோடு தகராறு செய்து கொண்டிருக்கிறது.

அல்லது இந்தியா எந்த நாடு மீதும்படைஎடுத்திருக்கிறதா?

ஒன்றுமே இல்லை. கோவா இந்தியாவின்ஒரு கிளை, இதற்கு பூகோளம், புராதனம், சரித்திரம் அத்தனையும் ஆதாரம். இதை இடையிலே வந்த ஒரு அன்னிய ஆட்சி எடுத்துக் கொண்டது. அதனிடமிருந்து மீட்ட இந்தியாவுக்குஉரிமைஇருக்கிறது உரிமையைச் செயல்படுத்துவதில் சர்வதேச சிக்கல்எப்படி ஏற்படும்?

சர்வதேச சிக்கலை ஏற்படுத்தும் அளவுக்கு இந்தியா வலிமை பெற்றிருப்பதாகவோ, அவ்வளவு பெரிய வாய்ப்பை இந்தியாவுக்கு மேற்கு வல்லரசுகள் அளித்திருப்பதாகவோ நாமறியவில்லை.

சிங்கப்பூரில் நமது விற்பனையாளர்
ஏ. எம். ஷேக் சுலைமான்
151, பி. மார்க்கட் வீதி
சிங்கப்பூர்-1

உலக மேடையில் நடைபெறுகிற விவகாரங்களில் இந்தியா ஒரு உப பாத்திரத்தின் அந்தஸ்தைகூட இன்னும் பெறவில்லை. எல்லாம் மாலையணி வைபவத்திற்குள்தான் நிற்கின்றன.

கோவாவை இந்தியாவின் சொந்தமாக்குவதில் சர்வதேசச் சிக்கல் விழுமென்றால், இந்தியாவை வெள்ளையர், இந்தியருக்கு விட்டுக்கொடுத்ததிலும் ஒருசர்வதேசச் சிக்கல் ஏற்பட வழிஇருக்கிறது என்ற பீதி வேறு கிளம்புகிறது.

இந்தியாவைவிட்டுப் போகும்போது பத்து வருடங்களில் திரும்புவோம் என்று வெள்ளை அதிகாரிகள் சிலர் சொன்னார்களாம். அதே மாதிரி அவர்கள் திரும்பிவந்து இந்தியா எங்களுக்குத்தான் என்று வம்பு செய்தால்கூட நமது அருமை நேரு, அவருடைய பஞ்சாமிர்தக்கொள்கைக்காகவும், சர்வதேசச் சிக்கல் ஏற்படும் என்பதற்காகவும் கையைக் கட்டிக் கொண்டு சமாதான ஜபம் செய்வாரோ என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது!

உண்மையில் இந்தக் கோவா விவகாரத்தில் இந்திய சர்க்கார் நடந்து கொள்ளும் விதத்தில் எத்தனையோ மர்மங்கள் மறைந்திருக்கின்றன. மர்மம் எதுவாக இருந்தாலும், 9 வயதுடைய சுதந்திர இந்தியாவுக்கு, 90வயது கிழட்டுத்தன்மை முற்றி இருக்கிறது என்பதுதான் வெளிப்படையாகத்தெரிகிறது.

அல்லாத போனால் தயவுதாட்சண்யம் பாராமல், நிராயுதபாணிகளைச் சுட்டுத்தள்ளுகிறபோர்ச்சுகல் முரடர்களிடம் அஹிம்சை வாதம் செய்து கொண்டிருக்க எந்தக் கேடுகெட்ட தொத்தல் நாடும் சம்மதிக்காது.

நேருவின் அஹிம்சை போர்ச்சுகலுக்கு உயிர்காணிக்கை வாங்கிக் கொடுக்கிறது. அதே அஹிம்சை சொந்த இந்தியாவில் துப்பாக்கிப்பிரயோகமாகமாறிமாணவர்களைக்கூடக் கொல்லுகிறது. ஆக, நமது அகிம்சை நமது மக்களைப் பலிவாங்குவது போதாதென்று, அன்னியருக்கும் நரபலி கொடுக்கிறது. இந்த இரக்கமற்ற-அல்லது வீரமற்ற அஹிம்சை நீடூழிவாழ வேண்டுமானால், இந்தியத்தாய் 5 மாதங்களுக்கு ஒரு குழந்தை வீதம் பெற்றுப் பலி கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். என்ற ஒன்றுதான் இன்று நிதர்சனமாயிருக்கிறது.

உயிர்பலி கேட்கும் ரத்தவெறியேறிய அகிம்சையும் சாமாதானமும் யாருக்குத் தேவை?

சொந்தமரியாதை சந்தி சிரிக்கிறது—அதைக் கேட்க நாதியைக் காணோம்—இந்த லட்சணத்திலும் சமாதானமாம்— அகிம்சையாம்!

இந்த சமாதானமும் அகிம்சையும், அமுலில் இருப்பது போர்ச்சுகலுக்கு ஒரு பெரியவாய்ப்பாகிவிட்டது.

இந்த இரண்டுதான் தேவை என்றால் நேருவின் இந்தியா கோவாவை மறக்க வேண்டும். கோவா தேவை என்றால், அது கைக்குவருகிறவரை அகிம்சை—சாமாதானதைதக்கைவிடவேண்டும், இதுதான் உள்ள நிலைமை!

நேரு, எதை ஏற்க போகிறார்? திட்டவட்டமாகத் தெரிந்தால் வீணில், விடுதலை வேட்கை மேவி கோவாவில் உயிர்விடும் தொண்டர்கள் மிஞ்சுவார்கள்!

V.K
ஸன்பிளவர் சோப்
சலவைக்குச் சிறந்தது!
ஸன் பிளவர் சோப்
வாங்கி உபயோகியுங்கள்
வி. கே. சன்ஸ்
[பி. ஐ. டபிள்யு. லிமிடெட்]
80, மேலாவணி மூல வீதி, மதுரை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சப்பாணிச் சமாதானம், அமெரிக்காவின் சுதந்திரத்திற்குப் பாதுகாப்பளிக்கிறது—

ரஷ்யாவின் சக்திக்குப் புதுப் பொலிவு கொடுக்கிறது—

மக்கள் சீனவின் வாய்மைக்கு கட்டியங் கூறுகிறது!

ஆனல் இந்தியாவில் மட்டும் தாண்டவராய வேடம் தரித்து, இந்தியாவின் மரியாதையைப் பறித்து மாலை போட்டுக் கொண்டு நரபலி கேட்கிறது!

இந்தச் சண்டாள, சமாதானக் கொள்கைக்கு ரத்தாபிஷேகம் செய்து, மீன் எண்ணை கொடுத்து ஊட்டமேற்றுகிருர் நமது நேரு! இவருக்கு உலக மேடையில் தனி மதிப்பு—மரியாதை—வரவேற்பு — ராஜோபசாரமாம்! இதற்கெல்லாம் என்ன அர்த்தமோ தெரியவில்லை!

ஐரோப்பாக் கண்டத்தில் கொத்தவரங்காய்க் காம்புப் பெரிதில் ஒட்டிக் கொண்டிருக்கிற ஒரு போர்ச்சுகல் ஆட்சி தோளில் ஏறி மூக்கைக் கொத்துவதைத் தடுக்க முடியாதநேருக்கு உலக மேடையில் இவ்வளவு மரியாதை என்ருல் தை என்ருல் அந்தமரியாதையின் தரத்திற்கு என்ன விலைவைக்கலாம் என்பது வெட்ககரமான விஷயம்!

மேலும் உலக வல்லரசுகளாகியரஷ்யா,அமெரிக்கா,பிரிட்டன் பிரான்சு, சீன போன்ற நாடுகளே நேருவுக்கு கொடுத்துள்ள மதிப்பையும், மரியாதையையும், ஒரு குண்டூசிப் பெரிதில் உள்ள போர்ச்சுகல் குதறி எறிகிறது - அலட்சியம் செய்கிறது! நேருவுக்கு வல்லரசுகள் கொடுத்துள்ள மரியாதைமதிப்பில் அசல் தன்மை கொஞ்சமாவது இருந்தால் வல்லரசுகளுக்கு அடங்கிய போர்ச்சுகல் நேருவிற்குமுன்னே நின்று குஸ்திக்குத் தொடை தட்டுமா? மக்கள் சிந்திக்க வேண்டும்!

மாபெரும் வல்லரசுகள் நேருவை மதிக்கின்றன. அவர்பெரிய வல்லரசுத் தலைவரோ, விஞ்ஞான மேதையோ அல்ல — ஆயினும் மதிக்கின்றன. அந்த அளவுக்கு அவரிடம் நியாயம் இருக்கிறது. நேர்மை இருக்கிறது என்றுதான் பொருள்!

நெறி-நேர்மை- நியாயம் ஆகிய வற்றின் நேரடி நிருபணமாக வல்லரசுகளால் மதிக்கப்படுகிற நேரு நியாயம் தவறமாட்டார். என்பதில்வேறுபட எதுவுமிருக்க முடியாது.

ஆனல் போர்ச்சுகல் நேருவின் இந்தியாவில் ஒரு பகுதியை எடுத்துக்கொள்ளப் பார்க்கிறது. அவ்வாருனல் நியாயம், நெறி, நேர்மையை போர்ச்சுகல் எதிர்கிறது — உடைக்கிறது என்று தானே அர்த்தமாகும்.

[2-ம் பக்ககம் பார்க்க]

கட்சி அமைப்பு

மதுரை நகர் 2 வது வார்டுகோரிப் பாளையத்தில் பார்வார்டுபிளாக் அமைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப் படுகிறது.

தலைவர்:- கே. பி, பி. வாசகம் உபதலைவர்:- எஸ். எம். ஹனிபா, காரியதரிசி:- எம். காந்திபாண்டி, பொக்கிஷதார்:- எ. கண்ணுசாமி, கமிட்டி மெம்பர்கள்:- எம். எஸ். பிச்சை, கே. மருதுபாண்டி, ஆர். ரெங்கசாமி, மருதுவீரபாண்டி, எஸ். சக்கரபானி: சிவசங்கு, எ. பிச்சை.

கொஞ்சம் கவனியுங்கள்!

ஆளுக்கொரு **சோளுல்**

குழந்தைக்கொரு "ஆரெஞ்ஸ்"

கிரைப்-டில்-வாட்டர்

[இரண்டும் வீட்டுக்கு வீடு இன்றியமையாதவை]

தயாரிப்பு:— பாரத் டிரக் ஹௌஸ், மதுரை.

உரிமை:- டி. என். சி. நாகலிங்கம் பிள்ளை, அண்ட் சன்ஸ்.

திரைப்பட விமர்சனம்

மங்கையர் திலகம்

மதுரை பழனி டாக்கீசிலும், மீனாட்சி டாக்கீசிலும் ஒரே சமயத்தில் மக்கள் நிறைந்து வழிய ஓடுகிற ஒன்றைக் கொண்டே "மங்கையர் திலகம்" ஒச்சமற்றது என்பதை நிச்சயித்து விடலாம்.

கதையில் புதுமை இல்லை. பல படங்களில் பார்த்து அலுத்துப் போனதுதான். ஆயினும் பார்க்கப் பார்க்கப் பரவசப்படுகிற அளவுக்கு உணர்ச்சி ஓட்டம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

"அண்ணியின் வளையல்" என்ற மராத்திக் கதையின் மறுபதிப்பு—இது, ஆனால் கொஞ்சம் மாற்றம்.

அண்ணிமார்களுக்கு முக்யத்துவம் அளிக்கும் ஆர்வம் தமிழ்ப்பட முதலாளிகளுக்கு எப்படியோ ஊறிவிட்டது, இம்மாதிரிப் பல படங்கள் வந்து விட்டன. ஆனால் இதில் தாய்மைக்கு அதிக வாய்ப்பை புது மாதிரியில் அளிக்கப்பட்டிருப்பதுவும், ஆபாசம் சேர்க்கப்படாததுவும் சேர்ந்து படத்தை அலுக்காமல் அநுபவிக்கச் செய்கிறது. ஆயினும், கலைக்கே தாய் நிலையான தமிழ் நாட்டில் மராத்திக் கதையை வாடகைக்குப் பிடிப்பதை பொறுப்பதற்கில்லை.

மராத்திக் கதையை மூலம் பிசகாமல் தமிழில் கொண்டுவந்து விட முயன்றிருப்பதால்தான் சதாசிவப் ரம்மம் அர்த்தத்தைக்கூடத் தவற விட்டுவிட்டார். அதாவது வசதி வாய்ந்த அண்ணன், தன் அருமைத் தம்பியை, அதுவும் மிகச்சிறிய வயதுடையவனை தனக்குச் சமையல் செய்து போடச்சம்மதிப்பானா? அண்ணன் தன் தம்பியிடம் காட்டும் அன்பின் அளவை எடைபோடுகிறபோது அவனைச் சமைக்கச் சொல்வது மிக மிகக் கொடுமை என்றே தோன்றுகிறது. தம்பியைச் சமைக்கச் சொல்வதற்குப் பதிலாக ஹோட்டலில் சாப்பாடு எடுத்து வருவதற்கு பயன்படுத்தியிருந்தால் கதையின் அம்சம் தனிச் சோபை பெற்றிருக்கும்.

வசனம் பாதகமில்லை,

அடங்காப்பிடாரி நாடகம் தேவையற்றது. ஆனால் அதில் ஆத்திரத்தோடு வந்த பெண்ணின் தந்தையையே தலைமை வகிக்கச் செய்யும் கட்டம், நினைத்து நினைத்து சிரிக்க வேண்டியதாகும்.

நடிப்பில் பத்மினி 'சபாஷ்' என்று கைதட்டும்படி உணர்ச்சிகளை வாரிக்கொட்டி நடித்திருக்கிறார், கடைசியில் அவரது நடிப்பு உள்ளத்தைப் பிழிந்துவிடுகிறது!

அடுத்து பாராட்டைப் பெறுவது அழுது அழுதே நடிக்கும் 'வாண்டுக் குழந்தைதான்,

எம். என். ராஜம் வழக்கம் போல நடித்திருக்கிறார்.

ராகினி- பத்மினியின் தங்கை என்ற காரணத்தாலோ என்னவோ நடிப்பு வெகு அழகாக வருகிறது! உணர்ச்சிகளை வெகு நன்றாக மாற்றி நடித்திருக்கிறார்-

சிவாஜிகணேசன், நின்று நிதானமாக நடித்திருக்கிறார். குரலில் பழைய கம்பீரம் இல்லாவிட்டாலும் நடிப்பில் உயிர்த்துடிப்பு இருக்கிறது.

தங்கவேலு மிகைப்படாமல்கச்சிதமாய் நடித்திருக்கிறார்.

சாரங்கபாணி அடக்க ஒடுக்கமாக-'கமுக்கமாய்' நடித்திருக்கிறார்.

டைரக்ஷன்- பிரசாத்- அவரது திறமை முத்திரை குத்தப்பட்டிருக்கிறது.

'மங்கையர் திலகம்' அவசியம் பார்த்துவைக்க வேண்டிய படம் தான்.

—டிடெக்டிவ்

மதுரையில் ஓடும் படங்கள்

மீனாக்ஷி—பழனி	—மங்கையர் திலகம்
சென்ட்ரல்	— குலேபகாவலி
சிந்தாமணி	— க. க. க. தெய்வம்
சிடி	— நண்பன்
தினமணி	— மூன்றுபிள்ளைகள்
இம்பீரியல்	— ஆசை அண்ணா அருமைதம்பி
தங்கம்	— ஷா-என்-ஷா (ஹிந்தி)
தேவி	— மெஹ்பூபா (ஹிந்தி)
லெக்ஷ்மி	— அலிபாபாவும் 40 திருடர்களும் (ஹிந்தி
ரீகல்	— மெஸ்ஸலினா [ஆங்கிலம்]
நியூசினிமா	— எ ஸ்டார் இஸ் பார்ன் [ஆங்கிலம்]

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

திபேத்திற்கு சீனர்கள் வந்த காலத்திலேயே 1950- நவம்பரிலேயே, நேருவும், படேலும் இந்தியாவுக்கு ஆபத்து என்று குமுறினார்கள். இப்போதோ நேபாளத்துக்கும், சீன உறவு அதிகரித்து விட்டது. அதுவும் மாஜி ஐ.என்.ஏ., கே. ஐ. சிங்கின் உறவோடு கலந்து வருகிறது.

பாகிஸ்தான் சர்க்காரோ பலவீன மடைந்திருக்கிறது, அதன் ராணுவமோ கோவாவோடு தொடர்புகொண்டு நிற்கிறது.

இங்கிலேயிலாவது காமன்வெல்த் என்பதன் பெயரால் ஆசியாவுக்கு இழைக்கின்ற தீங்கை கைவிட்டு இந்தியாவின் மானத்தைக் காப்பாற்றுகிற பாதையில் காமன்வெல்த்தை விட்டு விலக வேண்டும் இந்தியா!

இந்த அறிவை ஆண்டவன் நேருவுக்கு அளிப்பாராக!

ஜெய்ஹிந்த்

அன்பா? அணியா?

—காரல் முகி—

கண்ணன் ஆபீஸிலிருந்து ஒரு கட்டுடன் வீட்டினுள் நுழையவும் சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் ‘டாண் டாண்’ என ஆறு அடித்து ஊரவு கூறியது. மறு விநாடி உவப்பின் புளகம் தோன்ற குதூகலமாக மெல்லிய சீரடி வைத்து அவனை எதிர் கண்டாள் மீரா. கட்டை கையில் வாங்கி அலமாரியில் வைத்துவிட்டு தயாராக உள்ள ‘டிபனை’ அவனுக்குப் பரிமாறினாள்.

அதுவரை ஆபீஸில் வதிந்த தொந்தரவை அவள் முகத்தில் உலவிய தண்ணிய சாயல்போக்கி அவனை அமைதியில் குளிக்கச் செய்தது.

அவன் காபியைப் பருகி எழுந்தபொழுது அவளை கவனித்தான். அவள் கண்களில் ஏதோ கனவு காண்பது போன்ற ஒரு பாவனை தோன்றியது. அவள் மெதுவாக தனக்குள் மெல்நகை பூப்பதையும் உணர்ந்தான்.

“மீரா! என்ன ஒரு மாதிரியாய்?”

“அண்ணி வந்து கோவிலுக்குக் கூட்டிப் போனது...”.

“அதற்கு?” என்றவன் அவளைப் பார்த்து நகைத்துக் கொண்டு, “உன்னைக் காலையிலேயே நான் கூட்டிப் போயிருக்கவேண்டும். இல்லையா மீரா?” என்றான்.

மீராவின் முகம் மலர்ந்தது.

கண்ணன் ‘ஹாய்’யாக ஈஸிசேரில் சாய்ந்தான். மீரா அவன் கால்களுக்கு ஒரு ‘ஸ்டூலை’ அண்டல் கொடுத்தாள்.

“...வந்து...”

“என்ன மீரா! என் தயங்குகிறாய்?”

அவளுக்கு வார்த்தைகள் வர மறுத்தன, அவள் வேகமாக உள் அறைக்கு ஓடி ஒரு சிறிய அட்டைப் பெட்டியைக் கொண்டுவந்து கொடுத்தாள். அதுவரை திகைத்திருந்த கண்ணன் அதை வாங்கி திறந்தான். அதிலிருந்து மாங்காய் மாலையொன்று கண்ணைக் கவர்ந்தது.

“வேலையும் நன்றாய் இருக்கிறது” என்று அதை திருப்பித் திருப்பி கவனித்தான் கண்ணன்.

“ஆ...மா...ம் அழகாய் இருக்கிறது.” என்று அவன் முகத்தைப் பார்த்தாள் அவள் உள்ளத்து ஆசையை அவள் முகமும் கண்களும் புலப்படுத்தின.

“இது யாருடையது மீரா?” என்றபொழுது அவன் உள்ளம் அப்படி ஒடிந்து போவானேன்?

“அண்ணிக்கு அவள் புருஷன் வாங்கி இருக்கிறார்.”

“ஓகோ...அவனுக்கு இந்த வருஷம் போனஸாக ஐநூறு கிடைத்தது......நமக்கு இந்தப் பாழாய்ப் போன சர்க்கார் உத்தியோகத்திலே...” அவன் பேச்சும் மூச்சும் அடங்கிவிட்டன. மீரா பரிதாபமாக நின்றாள்.

கொஞ்ச நேரங் கழித்து, “இந்த மாலை என்ன விலையாம், மீரா” என்று கேட்டான். அவன் கண்களில் நீர் சுரந்தது.

மீராவுக்கு தலை கால் தெரியவில்லை. சந்தோஷத்தால் ஒரு விநாடி திக்கு முக்காடினாள்.

“அதைக்கேட்க மறந்துவிட்டேன், உங்களிடம் காண்பிக்க வேண்டுமென்ற ஆவலிலே.”

“இருக்கட்டும். காலையிலே அவனைக் கேட்கிறேன். உனக்கும் ஒன்று வாங்குவோம் மீரா” என்றான். அவன் குரல் ஏனோ கம்மிக் கொண்டது.

* * *

கல்யாணமாவதற்கு முன் மீரா ஒரு வனக் கொடி. அதிகமாகப் பேசுவாள். சஞ்சலமான சுபாவம் கொண்டவளுங்கூட. ஆனால் இன்று அவள் கண்ணனின் ஆசைக் கொடி. வாயாடியாகவோ வெகுளியாகவோ அவள் இருந்ததில்லை. கண்ணன் ஆபீஸிற்குப் போன பின்பும் அவன் எண்ணங்களே அவளைச் சூழ்ந்து நின்று அவன் வரும்வரை இன்பமூட்டிக் கொண்டிருக்கும். மாலையில் அவன் ஆபீஸ் முடிந்து வருவதில் கொஞ்சம் தாமதமாகிவிட்டால் கூட சோர்ந்து போவாள்.

கண்ணனும் அப்படித்தான். ஆபீஸில்கூட அவனுக்கு அடிக்கடி மீரா

[15-ம் பக்கம் பார்க்க]

44 ஆண்டுகளாக புகழ் பெற்ற
மேரிராம் பற்பொடி
சகலவித தந்த நோய்களையும் அறவே ஒழிக்க வைத்திய முறைப்படி தயாரிக்கப்படுகிறது
தயாரிப்பவர்கள்:
ஆர். எஸ். பதி அண்டு கோ.
(REGD.)
214 & 215, மேலமாசி வீதி • மதுரை

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

ப:– நடப்பையே தாங்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்பதை உங்கள் கேள்வியே காட்டுகிறது. ஹாங்காங் தீவை, பிரிட்டன் அரசாங்கம் மக்கள்சீனவிடமிருந்து ஒரு சில வருடக் குத்தகைக்கு எடுத்திருக்கிறது, குத்தகை ஒப்பந்த காலம் முடிந்தவுடன் ஹாங்காங்ஆட்சி மக்கள் சீனவைச் சேர்ந்துவிடும். ஒப்பந்த ஷரத்துகளுக்குமாருக பிரிட்டன் நடந்துகொண்டால், குத்தகையை இடையே முறித்துவிட்டு ஹாங்காங்கை மக்கள் சீன வசப்படுத்திக்கொள்ள நேரமாகாது. பார்மோசா காலனி ஆதிக்கத்தில்இல்லை. அது அமெரிக்காவின் அடிவருடியான சியாங்கேஷேக்கின் அடைக்கல ஸ்தலமாக இருக்கிறது. அதிலும் அமெரிக்க ஆதிக்கம் சியாங்பெயரால் மேலோங்கி நிற்கிற காரணம்தான் இன்று மக்கள் சீனவை, பார்மோசாப் போரில் இழுத்து விட்டிருக்கிறது. இதில் மக்கள் சீன முழுமூச்சாய் இறங்கிவிட்டால் பார்மோசா பீகிங் ஆட்சியின் வசப்பட ஒரேயொருநாள் சாவகாசமே போதும். மக்கள் சீன கொஞ்சம் தயங்குவதற்குக் காரணம் முடியாத்தனம் அல்ல. சியாங்கின் மீதும், அவரை நடத்தும் அமெரிக்கர் மீதும் தீவிரப் போரில் இறங்கிவிட்டால், பார்மோசாவில் வாழும்பாமரச் சீன மக்கள் அழிவார்களே என்பதற்காகத்தான் இயன்றஅளவு கொலைகளைத்தவிர்க்க சமாதான வழிகளைக் கையாளுகிறது. நிற்க, சுதந்திரத்தைப் பொறுத்த வரையில் இந்தியாவுக்கும், சீனவுக்கும் பேதம் அதிகம்! கடைசிக் கட்டத்தில் வெள்ளையர்கள் கொடுத்து நாம் வாங்கியது, இந்திய சுதந்திரம்! சீனச் சுதந்திரம் எவரும் கொடுத்து வாங்கியதல்ல. ஆரம்பத்தில் அடிபட்டு, பிறகு அடித்துவாங்கியதாகும்! ஆகவேசீனச் சுதந்திரத்துக்கு சக்தி அதிகம் என்பதை நண்பர் புரிந்து கொள்ளவேண்டும். இந்தியாவில் கொட்டமடிக்கிற போர்ச்சுகலுக்கு, இந்தியாவில் ஒரு கோவா இருப்பதுபோல் சீனவில் ஒரு மக்காவ் இருக்கிறது. இது மிகச் சிறிய திட்டு. இதைப் போர்ச்சுகல் நீண்டகாலமாக வைத்திருக்கிறது. ஆனல் இந்தியாவில் செய்வதுபோல் அங்கு விஷமம் செய்யவில்லை. ஏற்கனவே ஒரு தடவை சீனமக்கள் மக்காவை ஆளும் போர்ச்சுகலை எதிர்த்து பெரும் நஷ்டத்தை உண்டாக்கி இருக்கிருர்கள். ஆனல் பீகிங் அரசாங்கம் இன்னும் நேரடி நடவடிக்கை எடுக்கவில்லை. எடுக்க ஆரம்பிக்கும் வரை போர்ச்சுகல் ஆட்சி அங்கு இராது! ஏனெனில், கொரியாப் போரில் ஐ. நா. வின் பல நாட்டுப் பட்டாளங்களையே புறமுதுகு காட்டவைத்த மக்கள் சீனவுக்குமுன் போர்க்சுகல் ஆட்சி முகங்காட்டி நிற்க நினைக்கவே அஞ்சுமல்லவா!

கே:— நேபாளத்தில் உள்ள கே. ஐ. சிங்குக்கும், நேதாஜிக்கும் தொடர்பு இருக்கிறதா? இன்றைய நேபாள அரசாங்கம் நேதாஜியை ஆதரிக்கிறதா?

ப:— கே. ஐ. சிங் நேதாஜியின் ஐ. என். ஏ. தளபதிகளில் ஒருவர் என்பதை நினைவிற்கொள்ளுங்கள்! நேதாஜியை நேபாள அரசாங்கமென்ன, அமெரிக்க, பிரிட்டனைத் தவிர இதர எல்லா அரசாங்கங்களும் நிச்சயம் ஆதரிக்கும்.

கே:— தேவரவர்கள் பர்மாவக்குச் செல்லும் நோக்கமென்ன? இதனல் யாருக்கு நன்மை?

ப:— பர்மா வாழ் இந்தியர்கள் ஆர்வத்தோடு அழைக்கிருர்கள்— போகிருர்! தேவரவர்கள் தேசியத்தின் சொந்தம். அவர் எதைச் செய்தாலும் அது தேசத்திற்குச் சாதகமாகத்தானே இருக்க முடியும்?

வே கிருட்டிணன்—ஆரணி,

கே:—கடவுளுக்கு மூளை இருக்கிற இடம் தலையா? வயிரு?

ப:– ஏன், உமது வாய் பிடரிப் பக்கம் இருக்கிறதோ?

வெண் சங்கு

மார்க் டிரேட்

சீயக்காய்தூள்

எண்ணெய் குளிப்பிற்கு
மேன்மையானது என்று

ஆற்ருேரம் குளத்தோரம்,
கிணற்ருேரம், குழாய்ஓரம்
எங்கும் இதே பேச்சுத் தான்.

எஸ். உரிமையாளர்:

பெத்தண்ண நாடார்

தஞ்சாவூர். போன் நிர். 108

கா. வேலாயுதம்மாள்—நெல்லை,

கே:— கோவில்ப்பட்டி பஞ்சாயத்துபோர்டு தலைவர் ஈ. வி. ஏ. வள்ளிமுத்து என்பவருக்கு, இந்த வட்டகைக் காங்கிரசில் இவ்வளவு சிறப்புக் கொடுக்கப்படுகிறதே ஏன்? அவர் ஒரு பெரிய தேசபக்தரோ, தியாகியோ, அன்றி பெரிய பட்டதாரியோ அல்ல! இவரை இவ்வாறு சிறப்பு விப்பதின் நோக்கமென்ன?

ப:— அவர் ஒரு மாஜி. தி. மு. க என்ற ஒரே நோக்கம் தான்!

வா. சு. கங்கைநாதன்—திருவாடி

● கே:— வரகவி சுப்ரமணிய பாரதி தலைசிறந்த அபேதவாதி! அவர் இன்று உயிரோடிருந்தால் இந்தப் புதுக் காங்கிரஸ் நிர்வாகத்திற்கு பச்சை எதிரியாகத்தான் இருப்பார். ஆனல் அவரை இன்று காங்கிரஸ்காரர்கள் பந்தயம் போட்டுக்கொண்டு கொண்டாடுகிருர்கள். என்ன காரணமாக இருக்கலாம்?

ப:— அவர் உயிரோடில்லை என்ற ஒரே காரணம் தான்! உயிரோடிருப்பவர்களைப் பட்டினி போட்டுக் கொல்லுவதும், செத்துப் போனவர்களைத் துதிபாடுவதும் தானே புதுக் காங்கிரஸ் வர்க்கத்தின் கொள்கையாக இருக்கிறது!

ஏ. சி. வைத்தியநாதன்-ஆடுதுறை

கே:— சொந்த மதத்தில் உள்ள தவறுகளை நாமே எடுத்துச் சொல்வது நல்லதா? கெட்டதா?

ப:— நல்லது தான். ஆனால் தவறுகளைச் சுட்டிக்காட்டும் இடம் நமது மதஸ்தர்கள் நிரம்பியதாக இருக்கவேண்டும். பிற மதஸ்கர்களிடம் நமது தவறுகளை எடுத்துச் சொல்வது கூடாது.

கே:- திருவள்ளுவர் விரும்பியவாறு ஆட்சி நடந்தநாடு என்றாவது இருந்ததுண்டா?

ப:- அம்மாதிரி ஆட்சி அவர் காலத்திலே கூட இல்லை. அதனால்தான் அவர், தாம் விரும்பிய நல்லாட்சியை எழுதிவைக்க நேர்ந்தது.

கே:—பணம் குறைவாயும், சொல்வன்மை அதிகமாயும் உள்ளவர்கள், தாம் மேற்கொண்ட செயலை முடிக்க முடியுமா?

ப:— முடியும். ஆனால் சொல்வன்மை மட்டும் போதாது. அதோடு, தியாக புத்தியும், நாணயமும், கொள்கைப்பற்றும் சேர்ந்திருக்கவேண்டும்.

கே:- ஒரு குற்றம் செய்தவனுக்கு தண்டனை கொடுப்பது நல்லதா? அபராதம் விதிப்பது நல்லதா?

ப:— குற்றத்தில் இருவகையுண்டு. ஒன்று தெரிந்துசெய்வது —மற்றொன்று தெரியாமற் செய்வது! தெரியாமற் செய்த குற்றத்திற்கு மன்னிப்பும், தெரிந்து செய்த குற்றத்திற்குத் தண்டனையும் கொடுப்பது தான் நீதிமுறை.

கே:- நம் நாட்டில் நீதி குறைவுக்கு காரணம் என்ன?

ப:- சட்டப் புத்தகங்களும், சட்டக் கல்லூரிகளும் பெருகி விட்டதுதான்.

கே:- வக்கீல் இல்லாத நாடு உண்டா?

ப:— உண்டு! மக்கள் சீனாவும், ஜப்பானும். அங்கு வக்கீல் சிலர் இருக்கிறார்கள். ஆனால் வழக்குகள் இல்லை. ஆகவே வக்கீல்கள் தமது படிப்பை வக்கீல் வேலைக்கு மாத்திரம் பயன் படுத்தாமல் வேறு தொழிலுக்கும் பயன் படுத்துகிறார்கள்.

கே:— விடுதலை வீரர் நேதாஜி அவர்கள் மீது உலக நீதிமன்றத்தில்இருந்த பிடிவாரண்டு ரத்தாகி விட்டதா?

ப:- ரத்தாகி விட்டதாக அதிகார பூர்வமான அறிக்கை எதுவும் இதுவரை இல்லை.

கே. யஸ். மணிராசன்—மதுரை.

கே:— ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று ஓதுகிறார்களே, அந்த ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்னென்ன?

ப:— மனிதக் குலமும், இயற்கையும்.

கே— கோவாப் பிரச்சினை அஹிம்சையில் தீருமா? பலாத்காரத்தால்த் தான் தீருமா?

ப:— அஹிம்சையால் ஆத்மாவை ஆள முடிந்த அளவு, அரசாங்கத்தை ஆளமுடியாது. அதிலும் காந்தியின் அஹிம்சை இந்தியாவுல் ஒரு காலத்தில் மந்திரமாக இருந்தது. இன்று தந்திரமாகி விட்டது. கோவாப் பிரச்சினைக்கு தீர்வுகாண அஹிம்சையை முன் வைத்து முனைந்தால் ஒன்றுமே நடக்காது.

கே. சங்கர் [அறிவாளி] -மதுரை.

கே:— வடநாடு வளமாய் வாழுவதைப் போல் தமிழ் நாடு தழைத்தோங்க முடியாதா?

ப:— முடியும், ஆனால் தமிழனுக்குத் தன்மானம் வர வேண்டும்!

பி. கே. டி. பாத்திமா— மதுரை.

கே:— நிலப்பரப்பை விட கடற்பரப்பு அதிகமிருப்பதன் காரணம் என்ன?

ப:— நிலமும், கடலும் இயற்கையின் படைப்புகள்! அதற்கு மனிதன் காரணம் கற்பிக்கலாம். ஆனால் அதையே உறுதிப்படுத்த முடியாது.

எம். கோதாவரி—அமைந்தகரை.

கே:— மாமியார்கள் என்றால் யார்?

ப:— மருமகள்களை அடக்கிஆளும் சர்வாதிகாரிகள்.

கே:— நேருவின் தங்கை விஜயலட்சுமி பண்டிட்டை, மேற்கு நாட்டார் 'கண்ணே' என்று அழைக்கிறார்களாம். விஜயலட்சுமி அம்மாவுக்கு அது சங்கடமாயிருக்கிறதாம். இப்பொழுது தான் இவர் இதைக் கூறுகிறார். முன்பு ஏன் கூறவில்லை.

ப:— அவருடைய பெண்மை இப்பொழுது தான் வேலைசெய்ய ஆரம்பித்திருக்கும்.

கே:— இந்தியாவின் மத்திய சர்க்காரை பெண் மந்திரிகளிடம் ஒப்படைத்தால் எப்படி இருக்கும்?

ப:— அவ்வளவு தான்! அரசாங்கத் தஸ்தாவேஜிகளில் புட்டா மாவாடைதான் வீசும்-அதோடு மாகாண மந்திரிகள் தமது காரியாலயங்களை டில்லிக்கே மாற்றிக் கொண்டு விடுவார்கள்.

எம்மார், சுந்தரேசன்— திருச்செங்கோடு.

கே:— பம்பாயில் நமது ராஜாஜி சென்னை ஆட்சியைப் பற்றிக் கூறியது எதைக் காட்டுகிறது?

ப:— அவரிடமிருந்தும் சில சமயங்களில் உண்மை வெளியாகும் என்பதை.

● இந்த இதழில் குறிப்பிடத்தக்க கேள்வி கேட்டவரெனக் கருதப்பட்ட திருவாடி, வா. சு. கங்கைநாதனுக்கு "கண்ணகி" இதழ் 3 மாதங்கள்வரை இலவசமாக அனுப்பப்படும். —ஆர்.

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

லாம் நிஜமாக இருக்குமானால் உங்களுக்கு ஏன் இவ்வளவு பணம்—உங்கள் தேவை மிக மிகக் கொஞ்சமாக இருக்கிற போது, கணக்கிற் கடங்காத பணத்தைக் குவித்து வைத்துக் கொண்டு என்ன செய்யப்போகிறீர்கள்?'' என்றேன்.

எனது கேள்வி, அவரை என்னவோ செய்திருக்கிறது புஜங்களைக் கொஞ்சம் உயர்த்தினார்; ஆழத்தில் கிடந்த அவருடைய கண்கள் ஒரு முறை மேலேறி, சுற்றிச் சுழன்றன. பிறகு, சாவதானமாக ஏதோ ஒன்றும் தெரியாத மழலையின் பச்சைக் கேள்விக்கு விசேஷமான விளக்கம் கொடுக்கவேண்டியதில்லை என்ற அலட்சிய தோரணையில், ''நான் இவ்வளவு பணம் திரட்டியிருப்பது மேலும் மேலும் பணத்திரட்சியை பெரிதாக்கத்தான்'' என்றார். நான் உடனே ஏன்? என்றேன். அவர், சற்று அழுத்தமாக ''பணத்தின் எண்ணிக்கையை உயர்த்தத் தான்'' என்றார். நான் விடவில்லை- பணஎண்ணிக்கையைப் பெருக்கி என்ன செய்வது''? என்று அதே கேள்வியைத் திருப்பினேன். என் கேள்வி மோதியதும் அவர் அயர்ந்து விட்டார். ஏதோ ஒரு திகைய முடியாத யோசனை அவர் நெஞ்சில் உருண்டு கொண்டிருப்பதை அவரின் அயர்ச்சி உணர்த்திற்று. சற்றே பிறகு, சாய்ந்திருந்த அவர் நிமிர்ந்து, அந்த நாற்காலியின் ஒரு புறத்தில் ஒருக்கணித்தவாறு, ஆச்சரியம் தெளியும் முகபாவத்தோடு என்னை நோக்கி உனக்குப் பைத்தியம் ஏதாவது உண்டா? என்றார். நான் அதைப் பற்றி ஆத்திரப்படவில்லை. அப்படி ஏதாவது உங்களுக்கு உண்டோ? என்றேன் சட்டென்று!

உடனே அந்தக் கிழட்டு மனிதர் நிமிர்ந்த தலையைத் தாழவிட்டுக் கொண்டு, பழுப்பேறிப் பாண்டல் பிடித்த தங்கப்பற்களை அலட்சியமாகக் காட்டி, கம்மிய குரலில் ''வேடிக்கையான மனிதன்: — எனது வாழ்க்கையில் இம்மாதிரி ஒரு நபரை இதற்குமுன் கண்டதேயில்லை'' என்று இழுத்தவாறு உதடுகளுக்குள்ளேயே வார்த்தைகளைக் கட்டுப்படுத்தி, ஓசையை மாத்திரம் பிசியவிட்டார்.

பிறகு சற்றுநேரம் மௌனமாயிருந்தார். பாவம்! அவருடைய அநுபவத்திற்கு நானும், எனது கேள்விகளும் முற்றும் முரணானவை. பணம் திரட்டுகிற விஷயத்தில் நான் உலகிற்கே லாயககில்லாதவன் என்ற முடிவுவரை அவருடைய சிந்தனை சென்றதோ என்னவோ சட்டென்று என்னை நோக்கித்திரும்பி தீர்மானமான தொனியில் ''சரி-இப்பொழுது நீ கேட்கவேண்டியதெல்லாம் கேள்.'' என்றார். நான் சற்று நிதானித்தேன். பதில் சொல்கிறவரே, ஆரம்பத்தில் சங்கடப்பட்டுவிட்டு பிறகு தேறிவிட்டார். அப்புறம் கேள்வி கேட்பதில் கஷ்டமென்ன! மேலும் எனது நீண்ட கால மன உறுத்தலுக்கு சரியான பரிகாரிப்பு வாய்க்கிறபோது சும்மா விடுவேனா? உற்சாகம் பீறிட்டது. கேள்விகளும் மளமளவென்று வெடித்தன.

நான்: பணம் எந்தவகையில் திரட்ட முடிகிறது?

அவர்: ஓ! அதுவா, மிகமிகச் சுலபம். உற்சாகமான வேலையுங்கூட! என்னிடம் ரயில்வே இருககிறது. விவசாயிகள் பண்டங்களை விற்பார்கள். நான் அவைகளை மார்க்கட்டுகளுக்கு எனது ரயில்வே மூலம் அனுப்புவேன். இதன் மூலம் விவசாயிகளுக்கு எவ்வளவு பணம் போய் சேருகிறது தெரியுமா? அவர்கள் அதைக்கொண்டு சாகாமல், சாப்பிட்டு வாழ்வதோடு, கடுமையாக உழைப்பதற்கு வேண்டிய பலத்தையும் பெறுகிறார்கள் அவர்களுக்குக் கொடுபட்டதுபோக மீதப்பணம் 'ரயில் சார்ஜ்' என்ற பெயரால் என்னைச் சேருகிறது. இவ்வளவுதான். எவ்வளவு சுலபம் பார்த்தாயா?

நான்: இதனால் அவ்விவசாயிகள் திருப்தி அடைந்து விடுகிறார்களா?

அவர்; திருப்தியடைகிறார்களோ இல்லையோ! அது என்னையோ, எனது போக்கையோ தடுத்துவிடாது. மக்கள் திருப்தியடையமாட்டார்கள் தான். முணுமுணுப்பார்கள். மேலும் எவர் முணுமுணுக்கிறார்களோ அவர்களெல்லாம் கையாலாகாதவர்களாகத் தான் இருப்பார்கள். அதைப்பற்றி நாம் கவலைப்படவேண்டியதேஇல்லை.

நான்: தங்கள் செயல் மக்களைத் திருப்திப்படுத்தவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறீர்கள். மக்களுக்காக மக்களால் நிர்வகிக்கப்படும் அரசாங்கம் என்று சொல்லப்படுகிற உங்கள் நாட்டு சர்க்கார், மக்களுக்குச் சாதகம் செய்வதற்காக இதில் தலையிடுவதில்லையா?

அவர்: அரசாங்கமா? —ம் — வாஷிங்டன்னிலிருக்கிற நபர்களைத் தானே குறிப்பிடுகிறாய்!...இல்லை. அவர்கள் என்விஷயத்தில் தலையிடமாட்டார்கள். அவர்கள் மிக நல்லவர்கள். அதோடு அவர்களிற் பலர் என்னுடையவர்களுங்கூட! ஆதலால் அவர்களை ஒரு பொருட்டாகக்கருதத் தேவையில்லை. நான் அவர்கள் இருப்பதாகவே நினைப்பதில்லை. என்வேலை எவ்விதத் தடையுமின்றி நடக்கின்றது. வாஷிங்டன் சர்க்கார் என் போன்ற பணம் திரட்டுகிறவர்கள் வீசுகிற வலையிலிருந்து மக்களைக் காப்பதாக நீ நினைக்கிறாயா?

(அடுத்த அலையில் முடியும்)

ஸ்வர்க்காவின்

சந்திரா

டால்கம்

பௌடர்

மிகச்

சிறந்தது

சேலத்தில் நமது விற்பனையாளர்

பி. எஸ். பி. ஏஜன்சீஸ்

செவ்வாய்ப்பேட்டை

சேலம்

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

நினைப்பு வந்து லாகிரியளிக்கும். அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் அப்படி அன்பாய் நேசிக்கிறவர்கள், இன்பத்தையும் ஆனந்தத்தையும் தவிர சண்டை சச்சரவென்பதே கண்டறியாதவர்கள்.

ஆனால் இந்த ஐந்தாறு மாதங்களாய் அவன் வீட்டுக்கு வர எட்டு ஒன்பது சில சமயம் பத்து பன்னிரெண்டு மணிகூட ஆகிவிடுகிறது. அவன் வீட்டிற்கு வரும்பொழுதுவன் அவன் ஆடைகள் இவ்விதம் அழுக்கடைந்து இருக்கின்றன என்பது அவளுக்கு விளங்கவில்லை. ஆபீஸ் முடிந்ததும் இரவு வேளையில் தினமும் கடை வீதியில் இருபது ரூபாய் சம்பளத்துக்கு அவன் ஓய்வு நேர கணக்கு வேலை செய்வதை அவள் கண்டாளா?

நேரம் கெட்டு நேரம் வருவதில் அவன் ஆகாரத்தையும் கவனித்துக் கொள்வதில்லை. மனைவியின் வற்புறுத்தலாலேயே கொஞ்சமாவது அன்னம் கொண்டான். சில சமயங்களில் நண்பர் வீட்டில் உணவுண்டதாகச் சொல்லியும் படுத்துக்கொள்வான். அன்னம் குன்றின் அனைத்தும் குன்றுமல்லவா? கண்ணன் இப்பொழுது பொலிவிழந்து வறண்டு போனான், இது மீராவுக்குத் தெரியாமலில்லை. தன் கணவன் இப்படிப் போவதற்கு காரணம் என்ன என்று அவளால் உணரவும் முடியவில்லை, அவனிடம் கேட்டுத் தெரிய முடியாத எலும்புருக்கி நோயாக இருந்தது.

அன்று மாலை மழை கொட்டு கொட்டென்று கொட்டியது. பேய்க் காற்றும் சுழற்றி சுழற்றி அடித்தது. காற்றில் கலந்த மழைத் துளிகள் ஜன்னல் வழியாக வீட்டினுள் நனைத்தது. மீரா ஜன்னல்களைச் சாத்திக்கொண்டு வந்தாள். அறையில் படுக்கையில் யாரோ போர்வையை மூடிக்கொண்டு படுத்திருப்பது தெரிந்தது. அருகில் வந்து பார்க்கவும் அவள் உடம்பு ஆடி விட்டது. வேகமாக அவன் உடம்பைத் தொட்டுப் பார்த்தாள். நெருப்பாகக் காய்ந்தது. வானத்திலிருந்து அடிபட்டு விழும் பறவைபோல அவன் மனம் துடி துடிப்பதை உணர்ந்தாள்.

அவள் நீர் பெருகிய கண்கள் சுழன்றன. கோட் ஸ்டாண்டில் கோட்டும் சட்டையும் நீர் சொட்டத் தொங்கிக் கொண்டிருந்தன. அவளுக்கு அங்கங்கள்செதுக்கப்படுவதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

அவள் ஒரு கம்பளியை எடுத்து வந்து அவன்மேல் நன்றாக மூடினாள். அன்று அவள் உணவருந்தவில்லை. இரவு முழுவதும் கண்ணீரும் கம்பலையுமாக அவனருகிலேயே அமர்ந்திருந்தாள்.

காலையில் கண்ணன் சிறிது காபி அருந்திவிட்டு ஆபீஸுக்கு கிளம்பினான். மீரா அவன் அருகில் வந்து "உங்களுக்கு உடம்பு சரியாக இல்லை. இன்று லீவு எடுத்துக்கொள்ளக் கூடாதா?" என்று வேண்டினாள்.

சம்பளப் பிடித்தம் ஏற்பட்டு விடுமே என்ற பயம் கண்ணனுக்கு. ஏதோ அவளுக்கு சமாதானம் சொல்லிவிட்டு அவன் வேலைக்குப் போனான்.

மதியமே வண்டியில் வீடு திரும்பி விட்டான் கண்ணன். அவன் உடம்பு தூக்கமுடியாதபடி இரும்பாய் இருந்தது. மீராவுக்கு ஒரே பீதி. தன் அண்ணியின் புருஷனைக் கூட்டி வரலாமென்றால் அவர் ஊரிலில்லை. பாவம் பெண். என்ன செய்வாள்? கண்ணீரை 'பொல பொல' வென உகுத்தாள். கண்ணனின் தங்கை பக்கத்தில் கலங்கி நின்றாள்.

"உங்கள் நிலைமை எனக்கு பயமாயிருக்கிறது ஒரு டாக்டரை கூட்டி வருகிறேன்" என்றாள் மீரா தழதழத்த குரலில்.

"ம் கூம். வேண்டாம் மீரா. டாக்டருக்குப் பணம் வேண்டாமா?"

"உங்கள் அலமாரியில் பணம் இருக்கிறதே. அதில் கொடுத்துக் கொள்ளலாம்"

"மீரா! தொடாதே! அந்தப் பணத்தை மட்டும் தொடாதே! அது உனக்கு மாங்காய் மாலை வாங்குவதற்கு" என்றான் அழுத்தம் திருத்தமாக.

மீரா தலையில் ஒரு பெரிய பாறை விழுந்ததுபோல இருந்தது. அவள் பரிதாபமாக கண்களில் நீர் பெருக அவனைப் பார்த்தாள். விவரிக்க இயலாத சோகமும் துக்கமும் கலந்த உணர்ச்சி அவள் முகத்தில் தோன்றியது. மீரா ஏதோ பேசுவதற்கு முயன்றாள்; மறு விநாடி பேச முடியாமல் விம்மினாள். தன் புருஷன் நாள் முழுவதும் உழைத்து சம்பாதிப்பது குறைந்த சம்பளம் தானே என்று எண்ணாது தானும் அண்ணியைப் போல மாங்காய் மாலை வாங்க வேண்டுமென்ற ஆசையல்லவா இத்தனை கஷ்டத்துக்கும் உள்ளாக்கியது என்று நினைத்து ஏங்கி அழுதாள்.

'அழாதே மீரா. என் அழுகிறாய்?' என்று இரங்கக் கேட்டான் கண்ணன்.

"உங்களை நான் மிகவும் வருத்திவிட்டேன். கணவனுடைய பரிபூரண அன்பைக் காட்டிலும் மனைவிக்கு வேறு எந்தப் பாக்கியம் சிறந்தது? இனி எனக்கு மாங்காய் மாலை வேண்டாம். நீங்கள் எப்படியாவது சுகமானால் போதும். டாக்டரைக் கூட்டி வருகிறேன் என்று" கண்ணன் கால்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதாள் மீரா. அவளை அப்படியே அன்புடன் அணைத்துக் கொண்டான் கண்ணன்.

எல்லாம் நல்லவை!

ஸ்ரீ

சண்முகா கபே

பிருமணாள் காபி கிளப்

புரோப்ரைட்டர்: ஆர். என். சண்முகம் பிள்ளை

290, ராமநாட் ரோட் :: மதுரை

பிறந்த தின விழா

ஓயா உழைப் பால் உன்னதம்பெற்று, ஆசியாவின் பெரும்பகுதியிலும் புகழோடு விளங்கும் மதுரை சைபால் கம்பெனியின் பங்காளி திரு. எஸ். சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் குடும்பக் கொடியான செல்வி சூரிய காந்தாவின் முதலாண்டு நிறைவு விழாவும் காதணி விழாவும், ஆயுள் ஹோமமும்2-9-55 காலையில்சைபால் உற்பத்திசாலைக் கட்டிடத்தில் தலை சிறந்தமுறையில் நடைபெற்றது.

பிரமுகர்களும், அன்பர்களும்,வர்த்தகர்களும், டாக்டர்களும், பத்திரிகையாளர்களும் ஆயிரமாயிரமாக வருகை புரிந்து குழந்தைக்குப் பல்லாண்டு கூறினர்.

ஆசிச்செய்திகளும், பரிசுகளும் ஏராளமாக வந்திருந்தன.வந்தோரனைவரையும், சைபால் கம்பெனியின் மற்றொரு பங்காளியான திரு. எம். ராமலிங்கம் பிள்ளை அவர்களும், கம்பெனிச் சிப்பந்திகளும் நன்கு வரவேற்று உபசரித்தனர்.

குழந்தை சூரியகாந்தம் பல நூற்றுண்டுகள் வாழ வாழ்த்துகிறோம்.

உ. மு. தேவர் உடற் பயிற்சிசாலை

மதுரை டவுன் 9—வது வார்டு இளந்தோப்பு. 1—வது தெரு. டோர் நீர். 1.ல் உ. வி. நல்லபெருமாள்த் தேவர் அவர்கள் காம்பவுண்டில் உ. முத்துராமலிங்கத்தேவர் முன்னணி வாலிபர் தேகப்பயிற்சி சாலை ஏற்படுத்துவதற்காக கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு 50 பிரதிநிதிகள் வந்திருனர், அவ்வமயம் கூட்டத்திற்கு பி. கே.முக்கையாத்தேவர் எம். எல். ஏ. அவர்கள் தலைமை வகித்தார். சாண்டோ லெ. சோம சுந்தரஞ் செட்டியார்அவர்கள் திறப்பு விழாச் செய்தார்ாள். தேகப்பயிற்சி சாலையின் அவசியம் பற்றி சொற்பொழிவாற்றினர்கள். புரோபஸர் டி. பி. லாம், பி. ஏ. அவர்கள் ஆத்ம சக்தியைப் பற்றியும் அரசியலைப்பற்றியும் தலைவர் அவர்களுடைய தியாகத்தைப் பற்றியும் சொற்பொழிவாற்றினர்கள். தலைவரின் முடிவுரையில் தேவரவர்களின் தியாகத்தைப் பற்றிய சொற்பொழிவுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

நிர்வாகஸ்தர்கள்

தலைவர், பி.கே.மூக்கையாத்தேவர் எம். எல். ஏ. காரியதரிசி, உ.வி.நல்ல பெருமாள்தேவர். கூட்டுக்காரியதரிசிகள், வி.ராமச்சந்திரன் எம். ஆர். பெருமாள்தேவர் அட்வைசர் டி. பி. லாம் பி. ஏ. சர்வதேச ரேகை சாஸ்திரி. பொக்கிஷதார், ஐக்யபால் சாமி. கமிட்டி மெம்பர்கள் ஏ. நாகத் தேவர், சு, வயிரவத்தேவர்,மா. அழகர் சாமிதேவர், மாரியப்பத்தேவர், மீனாட்சி சுந்தரம்.

செந்தமிழ் நாட்டுச் செல்வச் சிறுவர்களுக்கு திடகாத்திர மளிக்கும் சிறந்த உணவு

ராஜாபார்லி பிஸ்கட்ஸ்

ஸ்தாபிதம்: 1926
நேம் அன் டிசைன் ரிஜிஸ்டர்டு
நிர். 143106
போன் நிர். 334.
கிளை: மெயின் ரோடு திண்டுக்கல்.

ஸ்தாபிதம் 1906.



ரிஜிஸ்டர்ட். நிர். 139255

பிலி மார்க் சர்பத்

47, அம்மன் சன்னதி,
மதுரை.

ஸ்தாபகர்:
K. ஒண்டிப்பிலியா பிள்ளை.

புரோப்ரைட்டர்:
K ஒண்டிப்பிலியா பிள்ளை சன்,
K. O. சுப்பிரமணிய பிள்ளை

வெளியிட்டதும், ஆசிரியரும் ஆர். சக்திமோகன் (ராகவன்) அச்சிட்டது: விஜயா பிரிண்டர்ஸ் லிமிடெட், டவுன் ஹால் ரோடு-கண்ணகி அலுவலகம். 80, மேல ஆவணிமூலவீதி மதுரை.

9 - SEP 1956